**8.79 பணியமைப்பு சிறப்பு சிற்றூராட்சிகள் நிர்வாகம் – தொகுப்பூதிய பணியாளர்கள் காலமுறை எற்ற ஊதியம் (Time Scale of pay) நிர்ணயம் செய்திட விதிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் ஆணை விலக்கப்படுகிறது. காலமுறை ஏற்ற ஊதியம் நிர்ணயம் செய்திட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.**

---

ஊ.வ.(ம) ஊராட்சிகள் (சிஊப) துறை

அரசாணை (நிலை) எண்.60 நாள் : 23.06.2006

படிக்கப்பட்டவை,

1. அரசாணை (நிலை) எண்.84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21–5–1998,
2. அரசாணை (நிலை) எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 5–5–1998,
3. அரசாணை (நிலை) எண்.198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26–10–1998,
4. அரசு கடிதம் எண்.21136/பேரூ.2/2002–2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 29–7–2002.
5. அரசு கடிதம் எண்.34530/பேரூ.2/2002–2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27–9–2002.
6. அரசு கடிதம் எண்.35199/பேரூ.2/2002–2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27–9–2002.

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் அந்நாளைய பேரூராட்சிகளில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள், தெருவிளக்கு பராமரிப்பு / மின் பணியாளர்கள் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணியாளர்களை தொகுப்பூதியத்தில் கொண்டு வருவது குறித்தும் மேலும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குப் பின்னர் அப்பணியாளர்களின் செயலாக்கத்தினை மதிப்பீடு செய்து ஏற்ற முறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிசீலிக்கப்படும் எனவும் ஆணையிடப்பட்டது.

2, அதன் அடிப்படையில் பேரூராட்சிகளில் பணிபுரிந்த தினக்கூலி பணியாளர்கள் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டனர். அவர்களில் 1645 தொகுப்பூதிய துப்புரவுப் பணியாளர்களை காலமுறை எற்ற ஊதியத்தில் நியமனம் செய்து ஆணையிடப்பட்டது. அரசின் அப்போதைய நிதி நெருக்கடி காரணமாக மேற்படி அரசாணைகளின் செயலாக்கத்தினை நிறுத்தி வைத்து மேலே படிக்கப்பட்ட நான்கு முதல் ஆறு வரையிலான அரசு கடிதங்களில் ஆணையிடப்பட்டது,

3. தற்போது மேற்படி நிறுத்தி வைத்தல் (key in abeyance) ஆணைகளை அரசுவிலக்கிக் கொள்ளலாம் எனக் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் அரசாணை நிலை எண்.84 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21–5–1998 அரசாணை நிலை எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 5–5–1998, அரசாணை (நிலை) எண்.198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26–10–1998 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி சிறப்பு சிற்றுராட்சிகள் நிர்வாகத்தில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 1541 துப்புரவு பணியாளர்கள், 1182 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள், 200 மின் பணியாளர்கள் ஆகிய 2923 பணியாளர்களை, இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள அந்தந்த பதவிக்கு எதிரே குறிப்பிட்டுள்ள கால ஏற்றமுறை ஊதியத்தில் (Time Scale of pay) கொண்டு வருமாறு சிறப்பு சிற்றுராட்சிகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இந்நேர்வில் கூறப்படும் தொகுப்பூதியப் பணியாளர் ஊதியம் ஊராட்சி சுழற்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பொருள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை ஒருவார காலத்திற்குள் அரசுக்கு தெரியப்படுத்தும்படியும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அசோக் வர்தன் ஷெட்டி,**
அரசுச் செயலாளர்

**அரசாணை (நிலை) எண்.60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை**

**நாள் 23–06–2006**

**இணைப்பு**

| வ. எண். | பதவி | அரசாணை எண். | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | துப்புரவுப் பணியாளர் (Sanitary Worker) | அரசாணை (நிலை) எண்.199 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12–8–1997 மற்றும் அரசாணை (நிலை) எண்.84, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21–5–1998 | 2550–55–2660–60–3200 |
| 2. | தெருவிளக்கு பராமரிக்க மின் பணியாளர் மற்றும் உதவியாளர்கள்(Wireman Lineman and Helper) | அரசாணை (நிலை) எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 5–5–1998 | 1) மின் பணியாளர் 2650–65–3300–70–4000<br>2) உதவியாளர் / 2550–55–2660–60–3200 |
| 3. | குழாய் ஆய்வாளர் (Tap Inspector) | அரசாணை (நிலை) எண்,198 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 26–10–1998 | 2750–70–3800–75–4400 |
| 4. | உதவியாளர்(Helper) | அரசாணை (நிலை) எண்,198 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 26–10–1998 | 2550–55–2660–60–3200 |
| 5. | வடிகட்டி படுகை இயக்குபவர்(Filter Bed Operator) | அரசாணை (நிலை) எண்,198 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 26–10–1998 | 3050–75–3950–80–4590 |
| 6. | தலைமை நீரேற்று நிலைய பொருத்துநர்(Head Works Fitter) | அரசாணை (நிலை) எண்,198 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 26–10–1998 | நிலை–1 4000–100–6000<br>நிலை–2 3050–75–3950–80–4590 |
| 7. | குடிநீர் குழாய் லைன் பொருத்துநர்(Pipe Line Fitter) | அரசாணை (நிலை) எண்,198 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 26–10–1998 | நிலை–1 4000–100–6000<br>நிலை–2 3050–75–3950–80–4590 |
| 8. | மின் வினைஞர் (Electrician) | அரசாணை (நிலை) எ. 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள். 26–10–1998. | நிலை–1 4000–100–6000<br>நிலை–2 3050–75–3950–80–4590 |
| 9. | காவல்காரர்(Watchman) | அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள். 26.10.1998 | 2550–55–2660–60–3200 |
| 10. | மீட்டர் ரீடர்(Meter Reader) | அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள். 26.10.1998 | 2650–65–3300–70–4000 |
| 11. | மேல்நிலைத் தொட்டி / தரைமட்த் தொட்டி இயக்குபவர் / காவல்காரர் (OHT Operator / Watchman) | அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள். 26.10.1998 | 2550–55–2660–60–3200 |
| 12. | மோட்டார் இயக்குபவர் (Pump Operator) | அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள். 26.10.1998 | 2550–55–2660–60–3200 |

| | | | |
|---|---|---|---|
| 13. | குடிநீர் வழங்கல் பராமரிப்பவர்(Water Supply Maintenance) | அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள். 26.10.1998 | 2550–55–2660–60–3200 |
| 14. | கைபம்புகள் பராமரிப்பவர் (Hand Pumps Maintenance) | அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள். 26.10.1998 | 2550–55–2660–60–3200 |

நா. பாலசுப்பிரமணியம்
பிரிவு அலுவலர்.